செ.வெ.எண்: 445/2016 நாள்: 14.07.2016

**பத்திரிகை செய்தி**

கன்னியாகுமரி மாவட்டத்தில் அனுமதி பெற்ற சிற்றுந்துகளில் சில சுற்றுந்துகள் தடம் மாறி இயக்கப்படுவதாகவும், அதிகப்படியான கட்டணம் வசூலிக்கப்படுவதாகவும் பொதுமக்கள் மற்றும் மக்கள் பிரநிதிகளிடமிருந்து புகார்கள் வரப்பெற்ற வண்ணம் உள்ளது. விதிமுறைகளை மீறி தடம்மாறி இயக்கப்படும் சுற்றுந்துகள் மற்றும் அதிக கட்டணம் வசூலிக்கப்படும் சிற்றுந்துகளை கண்காணிக்க வாகனத் தணிக்கையானது மேற்கொள்ள மார்த்தாண்டம் மற்றும் நாகர்கோவில் வட்டாரப் போக்குவரத்து அலுவலர்களுக்கு அறிவுறைகள் வழங்கப்பட்டு, வட்டார போக்குவரத்து அலுவலர்கள் தலைமையில் தொடர்ச்சியாக வாகனத் தணிக்கையானது மேற்கொள்ளப்படுகிறது. ஆய்வின் மூலமாக விதிமீறல்களை மீறி செயல்படுவதாக கண்டறியப்படும் சிற்றுந்துகளுக்கு அபராதம் விதிக்கப்பட்டு வருகிறது. வழித்தடத்தில் முறையாக இயக்கப்படாமல் தடம் மாறி இயக்கியதற்காகவும், தொடர்ச்சியாக விதிமீறல்கள் புரிந்ததற்காகவும் கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்ட பின்னரும் சில சுற்றுந்துகளின் உரிமையாளர்கள் தொடர்ந்து விதி மீறல் புரிந்து வருவதனை கருத்தில் கொண்டு, மார்த்தாண்டம் வட்டார போக்குவரத்து அலுவலக பகுதியில், கடந்த மூன்று வருடங்களில் அதிக முறை விதிகளை மீறி இயக்கியதற்காக அபராதம் செலுத்திய மூன்று சிற்றுந்துகளின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு மூன்று சிற்றுந்துகளின் அனுமதிச் சீட்டு ரத்து செய்யப்பட்டுள்ளது.

அனுமதிக்கப்பட்டுள்ள வழித்தடத்தில் மட்டுமே சிற்றுந்துகள் இயக்கப்பட வேண்டும் என்பதால் விதி மீறலில் ஈடுபடும் சிற்றுந்துகள் தொடர்பாக பொதுமக்கள் புகார் அளிக்கலாம். வட்டார போக்குவரத்து அலுவலர்களால் தொடர்ந்து வாகனத்தணிக்கை மேற்கொள்ளப்பட்டு விதிமுறைகளை மீறி இயக்கப்படும் சுற்றுந்துகள் தொடர்பாக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற விபரம் தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சித்தலைவர்

நாகர்கோவில்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.**

.